சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – வேலை வாய்ப்பற்ற பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டம் – 2010–2011 ஆம் நிதியாண்டிற்கான தொடராணை மற்றும் ரூ. 42.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2)த் துறை

அரசாணை(நிலை) எண்.34 நாள்: 01–07–2010

ஆனி 17, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.22, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்(சந–4) துறை, நாள்.27.1.2010.
2. அரசாணை(நிலை) எண். 84, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்(சந–4) துறை நாள். 30.3.2010.
3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அவர்களின் நேர்முகக் கடித எண். வே.உ.1/18000/10, நாள். 25.5.2010.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித ந.க. எண். 5376/ஊம.3.1/08, நாள் 2.6.2010

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள வேலையில்லாத பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தொடர்ந்து 2009–10ம் ஆண்டில் செயல்படுத்த அனுமதி வழங்கியும், இத்திட்டத்திற்கென ரூ. 42.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளித்தும் ஆணை வெளியிடப்பட்டது. மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்திற்கென ரூ. 7,27,050/– கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்தும் ஆணை வழங்கப்பட்டது. இத்தொகை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரகத்தின் கீழ் செயல்படும் பல்வேறு சார்நிலை அலுவலர்கள் மூலம் மாநிலமெங்கும் பல்வேறு வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள 1,203 பார்வையற்ற பயனாளிகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு செலவிடப்பட்டுள்ளது என்றும், இத்திட்டத்தினை 2010–11ம் ஆண்டிற்கு செயல்படுத்த ரூ.68,16,600/– தேவைப்படுவதாகவும், இதற்கான நிதியை அரசிடமிருந்து உடன்பெற்று வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், 2010–11ம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 42.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஒவ்வொரு நிதியாண்டிலும் கூடுதல்

செலவினத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை தனியாக கோரி பெற வேண்டியுள்ளது என்றும், 2010–2011ஆம் நிதியாண்டிற்குத் தேவைப்படும் தொகை ரூ. 68,16,600,–நிதி ஒதுக்கீடு செய்து தொடராணை வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கோரியுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஏற்று வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள வேலைவாய்ப்பற்ற பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை 2010–11ம் ஆண்டில் தொடரவும் இத்திட்டத்திற்கென ரூ.42.00 இலட்சம் (ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சம் மட்டும்) செலவினம் ஒப்பளிப்பு செய்தும், மேலும் இச்செலவினத்தை காலாண்டு கட்டுப்பாட்டு நிதியொதுக்கத்திற்குட்பட்டு மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> “2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II–மாநிலத் திட்டம் –LT – வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள வேலை வாய்ப்பற்ற பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோருக்கான படிகள் வழங்குதல் – 09 உதவித் தொகை –01 – நடப்புச் செலவுக்கான உதவித் தொகை”.
>
> ( த.தொ.கு.2235–02–101– LT– 0919)

5 இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி(சமூக நலம்)/32624/10, நாள் 29.06.2010ல் கண்டுள்ள நிதித்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ. சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.